


கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், தேனி தெற்கு மாவட்டம், அ.தி.மு.க.வைச் சேர்ந்த எம். ஜெயக்குமார் தி.மு.க.வில் இணைந்தார். அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எ.வ.வேலு, எம்.எல்.ஏ., செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.



கழக துணைப் பொதுச் செயலாளரும் – நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்களை, அவரது இல்லத்தில், மதுராந்தகம் தொகுதி இடைத் தேர்தலில் கழகக் கூட்டணி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள, கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக் உள்ளார்.



மனித நேய ஜனநாயகக் கட்சித் தலைவர் மு.தமீமுன் அன்சாரி எம்.எல்.ஏ. அவர்களை மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் இ.பரந்தாமன், திருமதி எஸ்.சுகன்யா ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.




## தினமும் கொலை, கொள்ளைச் சம்பவங்களை வேடிக்கை பார்ப்பதேன்?

# கதாநாயக சாகசங்களைக் காட்ட - முதல்வர் திட்டமா?

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி!

சென்னை, செப். 11-

நாள்தோறும் நடந்து வரும் கொலை கொள்ளைச் சம்பவங்களை முதல்வர் ஜோசப் விஜய் வேடிக்கை பார்ப்பதை பார்க்கும் போது, ஏதேனும் கதாநாயக சாகசங்களை காட்ட அவர் திட்டமிட்டிருக்கிறாரோ என்கிற குழப்பம் மக்களிடையே எழுவதாக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.



இது தொடர்பாக அவரது பதிவு வருமாறு:-

தலைநகர் சென்னையில் மீண்டும் ஒரு கொலை! இப்படி நாள்தோறும் தொடரும் கொலை கொள்ளை சம்பவங்களால் ஒரு சந்தேகம் எழுவதை தவிர்க்க முடியவில்லை.

முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் அவர்கள், தான் ஒரு முன்னாள் கதாநாயகன் என்பதால், வணிகத் திரைப்படங்களில் காட்டப்படுவதைப் போல, முதலில் கொடூரக் கொலைகள் அரங்கேறுவதை வேடிக்கை பார்த்துவிட்டு, பின்னர் தனது 'கதாநாயக சாகசங்களை' காட்டலாம் என்று ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறாரா என்ற குழப்பமும் மக்களிடையே எழுகிறது.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பதிவிட்டுள்ளார்.

## தி.மு.க. வேட்பாளர்கள் இ.பரந்தாமன் – திருமதி எஸ்.சுகன்யா

# ம.ஜ.க. தலைவர் மு.தமிமுன் அன்சாரி எம்.எல்.ஏ.வுடன் சந்திப்பு!

சென்னை, செப்.11-

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளராக வழக்கறிஞர் பரந்தாமன், திருமதி. S.சுகன்யா ஆகியோர்நேற்று ம.ஜ.க. தலைமையகம் வந்தனர்.

ம.ஜ.க. தலைமையகம் வந்த அவர்களை, தலைவர் மு.தமிமுன் அன்சாரி அவர்கள் வரவேற்றார்.

ம.ஜ.க. சார்பில் தேர்தல் பணி குழுக்களை அமைக்க இருப்பதாகவும், தானும் பரப்புரைக்கு வருவ தாகவும் கூறினார்.

அவர்களுடன் தி.மு.க. இளைஞரணி துணைச் செயலாளர் கல்பாக்கம் பா.மாலிக், தி.மு.க.வின் திருப்பூர் (கிழக்கு) மாவட்ட செயலாளர் பத்மநாபன் ஆகியோரும் உடன் வந்திருந்தனர்.

இந்நிகழ்வில் இக்கட்சியின் துணைப் பொதுச் செயலாளர்கள் நாகை முபாரக், கலைக்குயில் இப்ராஹிம், மாநில துணைச் செயலாளர்கள் அரிமா. அஸாருதீன், S.M.நாசர், தாம்பரம் தாரிக், கொள்கை விளக்க அணி மாநில செயலாளர் பஷீர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் அபுதாஹிர், மத்திய சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் காஜா, வடசென்னை மத்திய மாவட்டச் செயலாளர் அஜ்மல் ஆகியோர் உடன் இருந்தனர்.

## புதுச்சேரி – தட்டாஞ்சாவடியில் இடைத்தேர்தல் :

# கழக வேட்பாளரை ஆதரித்து வாக்கு சேகரிப்பு!

## ஜெகத்ரட்சகன் எம்.பி. – இரா.சிவா பங்கேற்பு!

புதுச்சேரி, செப். 11-

புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் திமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் சேது செல்வம், திமுக கொள்கை பரப்புச் செயலாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி மற்றும் திமுக மாநில அமைப்பாளர் சிவா தலைமையில் நேற்று தனது பிரச்சாரத்தை தொடங்கி வாக்கு சேகரித்தார்.

புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதிக்கான இடைத்தேர்தல் அக்டோபர் 6ஆம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான வேட்பு மனு தாக்கல் நேற்று துவங்கிய நிலையில், வரும் 16ஆம் தேதி வேட்பு மனு தாக்கல் இறுதி நாளாகும்.

இந்நிலையில் தட்டாஞ்சாவடி தொகுதி இடைத் தேர்தலில் திமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் சேது செல்வம் நேற்று தனது பிரச்சாரத்தை தொடங்கினார். திமுக கொள்கைப் பரப்புச் செயலாளர் ஜெகத்ரட்சகன் மற்றும் மாநில அமைப்பாளர் சிவா ஆகியோர் தலைமையில், வேட்பாளர் சேது செல்வம் தட்டாஞ்சாவடி தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் பொதுமக்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

பிரச்சார தொடக்க நிகழ்ச்சியில் அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், மாநில துணை அமைப்பாளர்கள் வி. அனிபால் கென்னடி, அ. தைரியநாதன், திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. செந்தில்குமார், விக்னேஷ் கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் ந. தங்கவேலு, தொகுதி செயலாளர்கள் இரா. சக்திவேல், கோ. தியாகராஜன், செ.நடராஜன், ஆறுமுகம், அணி அமைப்பாளர்கள் செந்தில் முருகன், காயத்ரி, துணைத் தலைவர்கள் குரு, நவீன், துணை அமைப்பாளர்கள் தேவேந்திரன், கிருபா சங்கர், சிவதாஸ், சசிகுமார், நடராஜன், அஜய் பாரத், முத்து, பாலசுப்பிரமணியன், சுரேஷ், பால்ராஜ், சுரேஷ், தமிழ்மொழி, பிச்சாண்டி, ராஜா, பழனிசாமி, கலைவாணன், மதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

